# திராவிட மாடல் அரசு 28

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.

## 'தோழி' உழைக்கும் மகளிர் முகவரி!

'**ஆணுக்குப் பெண் சரிநிகர்**' என்பதெல்லாம் பழைய கதை. இன்று '**எங்கெங்குக் காணினும் சக்தியடா**' என்று சொல்லும் அளவுக்கு அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தங்கள் வெற்றிக்கொடியை நாட்டி வருகிறார்கள்.

உலக அளவில் பெண்களின் உழைப்பாற்றல் சுமார் 50 சதவிகிதமாக இருக்கிறது, என்கிறது உலக வங்கி. இந்தியாவில் இந்த எண்ணிக்கை சுமார் 24 சதவிகிதமாக இருக்கிறது. உலக வங்கியின் தரவுகள் சொல்லும் இன்னொரு முக்கிய அம்சம், சர்வதேச அளவில் கடந்த சில ஆண்டுகளாக பெண் உழைப்பாற்றல் தேக்கநிலையும், சில நாடுகளில் சரிவையும் சந்திக்க, இந்தியாவிலோ பெண் உழைப்பாற்றல்அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகம். இங்கு சுமார் 43 சதவிகிதம் பெண்கள், உற்பத்தித் துறை முதற்கொண்டு பல துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். மகளிர் உழைப்பாற்றல் அதிக அளவில் இருப்பது, நாட்டிலேயே இங்கு மட்டும்தான். மேலும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் உழைக்கும் மகளிரின் பங்கு கணிசமானது.

இந்தப் பின்னணியில், பெண்களின் முன்னேற்றத்துக்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு'. அதில் ஒரு முன்னெடுப்புதான் 'தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள்'.

### பெண் உழைப்புக்கு மரியாதை

நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்புக்கான புதிய வாய்ப்புகள் உள்ளதால், பல இளம் பெண்கள் தங்கள் வீடுகளை விட்டு, நகரங்களுக்கு வேலைக்குச் செல்ல ஆர்வம் காட்டுகின்றனர். விலைவாசி உயர்வு மற்றும் அதிக வாடகை காரணமாக, அன்றாட வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

இதனால், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், தங்களுக்குக் கிடைக்கும் சொற்ப வருவாயைக் கொண்டு, பணி நிமித்தம் புதிய இடங்களில் செலவுகளைச் சமாளிப்பது கடினம் ஆகும். இதுபோன்ற பணிபுரியும் பெண்களின் நிலையைக் கருத்தில் கொண்டு, 1971-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் ஏற்படுத்தப்பட்டன. இன்று மாநிலம் முழுவதும் 28 விடுதிகள் இயங்கி வருகின்றன.



ஆனால், கடந்த பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் அவை சரியாகப் பராமரிக்கப்படாததாலும், முறையாக நிர்வகிக்கப்படாததாலும் பல விடுதிகள் காலியாகவே இருந்தன. இந்நிலையில், அந்தப் பழைய விடுதிகளைப் புதுப்பிப்பதோடு, முற்றிலும் புதிய விடுதிகளையும் நம் கழக அரசு ஏற்படுத்தி வருகிறது. அதன் முதற்கட்டமாக, செங்கல்பட்டு மற்றும் திருச்சியில் 13 கோடியே 7 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் இரண்டு புதிய விடுதிகளும், சென்னை, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் 3 கோடியே 42 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் ஏழு புதுப்பிக்கப்பட்ட விடுதிகளையும் நமது முதலமைச்சர் சமீபத்தில் திறந்து வைத்தார்.

### விடுதிகளில் புதிய வசதிகள்

இந்த முன்னெடுப்பில் நம் '**திராவிட மாடல் அரசு**' செய்துள்ள புதுமை என்னவென்றால், பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகளை உருவாக்கிட '**தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்**' ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் பழைய விடுதிகளைப் புதுப்பித்தல் மற்றும் புதிய விடுதிகளைக் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விடுதிகள் '**தோழி**' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன.

மேலும் முன்பு இந்த விடுதிகளில் தங்க வேண்டுமெனில், சென்னையில் மாதம் ரூ.25,000 மற்றும் பிற இடங்களில் ரூ. 15,000 வரை சம்பளம் பெறும் பெண்களாக இருக்க வேண்டும் என்ற விதி இருந்தது. தற்போது, அந்த விதி நீக்கப்பட்டு, பணிபுரியும் பெண்கள் மட்டுமல்லாது, போட்டித் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள், கல்லூரிச் சேர்க்கை, நேர்முகத் தேர்வுகள் போன்றவற்றுக்காக ஊர் விட்டு ஊர் வரும் பெண்களும்கூட இந்த விடுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாத வாடகைக்கு மட்டுமல்லாமல், ஓரிரு நாட்களுக்குக் கூட இங்கே தங்கிக் கொள்ள பெண்கள் அனுமதிக்கப்படுவர்.

மேலும், 24 மணி நேர பாதுகாப்பு வசதி, பார்க்கிங் வசதி, பயோ மெட்ரிக் முறை செயல்பாடு, இலவச வைஃபை, அயனிங் வசதி, கெய்சர் வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளிட்ட வசதிகள் உள்ளன. தவிர, அறை வாடகையை டிஜிட்டல் முறையில் செலுத்தும் வசதியும், விருப்பமான அறைகளை இணையம் மூலம் முன்பே பதிவு செய்துகொள்ளும் வசதியும் உள்ளது.

இந்த விடுதிகள் மூலம் சுமார் 600-க்கும் மேற்பட்ட பணிபுரியும் மகளிர் பயனடைவர். தங்கள் இல்லம் விட்டு வரும் அவர்களுக்கு, இன்னொரு இல்லமாக இந்தத் 'தோழி' இருப்பாள் என்பதில் ஐயமில்லை..!

...சாதனை தொடரும்

### 'தோழி' விடுதிகளின் அறை விவரம்...

- திருச்சி - 32 அறைகள், 106 படுக்கைகள்.
- செங்கல்பட்டு - 41 அறைகள், 120 படுக்கைகள்.
- சென்னை - 52 அறைகள், 98 படுக்கைகள்.
- சேலம் - 21 அறைகள், 64 படுக்கைகள்.
- வேலூர் - 21 அறைகள், 58 படுக்கைகள்.
- விழுப்புரம் - 20 அறைகள், 58 படுக்கைகள்.
- பெரம்பலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி - ஒவ்வொரு மாவட்டத்திலும் 21 அறைகள், 60 படுக்கைகள்.

### வாடகை எவ்வளவு..?

◆ **திருச்சி**

இருவர் பகிர்ந்துகொள்ளும் அறை (மாதம் ஒன்றுக்கு) - ஏ.சி. வசதியுடன் ரூ.6,500. ஏ.சி. இல்லாமல் ரூ.5,000.

ஒரு நாள் வாடகை - ஏ.சி.வசதியுடன் ரூ.1,200, ஏ.சி.வசதி இல்லாமல் ரூ.1,000.

நால்வர் பகிர்ந்துகொள்ளும் அறை (மாதம் ஒன்றுக்கு) - சாதாரண அறை ரூ.3,500.

ஒரு நாள் வாடகை - ஏ.சி.இல்லாமல் ரூ.800.

◆ **செங்கல்பட்டு**

இருவர் பகிர்ந்துகொள்ளும் அறை (மாதம் ஒன்றுக்கு) - ஏ.சி. வசதியுடன் ரூ.8,500. ஏ.சி. இல்லாமல் ரூ.6,500.

ஒரு நாள் வாடகை - ஏ.சி.வசதியுடன் ரூ.1,200, ஏ.சி.வசதி இல்லாமல் ரூ.1,000.

நால்வர் பகிர்ந்துகொள்ளும் அறை (மாதம் ஒன்றுக்கு) - சாதாரண அறை ரூ.4,500.

ஒரு நாள் வாடகை - ஏ.சி.இல்லாமல் ரூ.800.

◆ **இதர இடங்களில்...**

இருவர் பகிர்ந்துகொள்ளும் அறை (மாதம் ஒன்றுக்கு) - ஏ.சி. இல்லாமல்

சென்னை - ரூ.5,500, சேலம் - ரூ.4,000, வேலூர், விழுப்புரம், பெரம்பலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி - ரூ.3,500.

ஒரு நாள் வாடகை - சென்னை, சேலம் ரூ.1,000; திருநெல்வேலி, வேலூர், தஞ்சாவூர் ரூ.800; விழுப்புரம், பெரம்பலூர் ரூ.600.

நால்வர் பகிர்ந்துகொள்ளும் அறை (மாதம் ஒன்றுக்கு) - சென்னை - சாதாரண அறை ரூ.4,500, பங்க் அறை (மேலே ஒரு படுக்கை கீழே ஒரு படுக்கை) ரூ.2,500.

சேலம், வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி - சாதாரண அறை ரூ.3,000, பங்க் அறை ரூ.2,500.

விழுப்புரம், பெரம்பலூர் - சாதாரண அறை ரூ.2,500, பங்க் அறை ரூ.2,000.

ஒரு நாள் வாடகை - சென்னை, சேலம் ரூ.800; திருநெல்வேலி, வேலூர், தஞ்சாவூர் ரூ.600; விழுப்புரம், பெரம்பலூர் ரூ.500.

அறைகளை https://www.tnwwhcl.in என்ற இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்துகொள்ளலாம்.

## உண்மை சுடத்தான் செய்யும் பிரதமரே!

இந்தியாவின் தலைசிறந்த ஒன்றிய அரசு அமைப்புகளில் ஒன்று, 'தேசிய குடும்ப நல ஆய்வு' (நேஷனல் ஃபேமிலி ஹெல்த் சர்வே) எனும் அமைப்பு. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை, இந்த அமைப்பு நாட்டின் சுகாதாரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும். அதன் அடிப்படையில்தான் பெரும்பாலும் மக்கள்நலன் சார்ந்த திட்டங்கள் தீட்டப்படும்.

இந்த அமைப்பின் தரவுகள், நாட்டின் இதர அரசு அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் மற்றும், வெளிநாட்டு ஆய்வாளர்களும் பயன்படுத்தும் அளவுக்கு அதிகாரப்பூர்வமானவை. அப்படி ஒரு மரியாதைக்குரிய அமைப்புக்குக் களங்கம் விளைவித்திருக்கிறார் பிரதமர் மோடி.

இந்த அமைப்பு தனது ஐந்தாவது சுற்று ஆய்வை சமீபத்தில் வெளியிட்டது. அதில் "நாட்டின் பெரும்பாலான இடங்களில் கழிவறைகள் இல்லை" என்று தரவுகளுடன் கூறியுள்ளது. இதன்மூலம், பிரதமர் பெருமையுடன் மார்தட்டிக் கொள்ளும் 'ஸ்வச் பாரத்' - நூறு சதவிகிதம் திறந்தவெளிக் கழிப்பிடங்கள் இல்லாத நாடு' என்ற கோஷம், பொய் என்று நிரூபணமாகி உள்ளது. இது பிரதமரைக் கடுப்பேற்றி இருக்கிறது. எனவே, 'நீங்கள் செய்த ஆய்வில் உள்ள தரவுகள் திருப்தி அளிப்பவையாக இல்லை' என்று சொல்லி அந்த அமைப்பின் இயக்குநர் கே.எஸ்.ஜேம்ஸுக்குப் பணியிடை நீக்க உத்தரவு பிறப்பித்திருக்கிறார் மோடி.

சட்டியில் இருப்பதுதானே அகப்பையில் வரும்... தரவுகள் பொய் சொல்லாது. உண்மை சுடத்தான் செய்யும் பிரதமரே..!

## ஃப்ளாஷ்பேக்





துளசிராமன்

### பேச்சுப் பயணம்!

1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் காங்கிரஸ் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்தை எதிர்த்து நின்று பெரியவர் டி.இராஜரத்தினம் வெற்றி பெற்றார். 1992 -ஆம் ஆண்டு நவம்பர் 6 -ஆம் தேதி அன்று பெரியவர் டி.ராஜரத்தினம் பிறந்த நாளையொட்டி, தலைவர் கலைஞரை கோபாலபுரம் இல்லத்தில் சந்திக்க அவருடன் சென்றோம். 13 வயதே நிரம்பி இருந்த என்னை கழக இளம் பேச்சாளர் என்று அறிமுகம் செய்து வைத்தார். அன்று தொடங்கிய கழகப் பயணம் இன்று வரை தொடர்கிறது.

**-பூவை என்.துளசிராமன்,**
**வட்டச் செயலாளர்,**
**பூவிருந்தவல்லி, திருவள்ளூர்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மொழிப்போர் முரசம்!

**1963-ஆம் ஆண்டு நவம்பர் 17 -ஆம் தேதி, இந்தி எதிர்ப்புப் போராட்டம் சென்னையில் தொடங்கியது. போராட்டத்தைத் தடுக்க, கழகத் தலைவர்களைக் கைது செய்யும் படலம் தொடங்கியது. நவம்பர் 16-ஆம் தேதி, சென்னை நகரம் முழுவதும் காவலர்களால் சூழப்பட்டிருந்தது. தடுப்புக் காவல் சட்டத்தில் பேரறிஞர் அண்ணாவும் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். அந்த வழக்கில் அண்ணாவுக்கும் மற்ற தலைவர்களுக்கும் ஆறு மாத காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அண்ணாவுக்கான சிறைக் கதவு திறந்த நேரத்தில், மொழிப்போர் முரசத்தால் தமிழ்நாடு அதிர்ந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 195




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131